ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2469/09 - 2025 දෙසැම්බර් මස 31 වැනි බදාදා - 2025.12.31
2469/09 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

(முத்திரை)

அநுர குமார திசாநாயக்க.

**சனாதிபதியின் பணிப்புரை**

அரசியலமைப்பின் 33ஆவது உறுப்புரையினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியாகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் றீபில்டிங் ஸ்ரீலங்கா சனாதிபதிச் செயலணியொன்றைத் தாபித்தல்

1. கௌரவ ஹரிணி அமரசூரிய – பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர்
2. கௌரவ எச்.எம். விஜித ஹேரத் – வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்
3. கௌரவ ஹரிச்சந்திர அபயரத்ன - பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்
4. கௌரவ லால் காந்த – கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்
5. கௌரவ உபாலி பன்னிலகே – கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்
6. கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி - கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்
7. கௌரவ பிமல் ரத்நாயக்க - போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்
8. கௌரவ நளிந்த ஜயதிஸ்ஸ - சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர்

1A - PG 7441 — 354 (2025/12)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

9. கௌரவ அனில் ஜெயந்த பெர்னாண்டோ – தொழில் அமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் பிரதி அமைச்சர்
10. கௌரவ பட்டபெந்திகே தம்மிக – சுற்றுலா அமைச்சர்
11. கௌரவ சுசில் ரணசிங்க – வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்
12. கௌரவ ஹனீஃப் யூசுப் - ஆளுநர், மேல் மாகாணம்
13. கௌரவ அருண ஜயசேகர - பாதுகாப்பு பிரதி அமைச்சர்
14. கலாநிதி என்.எஸ். குமநாயக்க - சனாதிபதியின் செயலாளர்
15. கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும – செயலாளர், நிதி, திட்டமிடல் அமைச்சு
16. திரு. எச்.எஸ்.எஸ். துய்யகொந்தா - செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
17. திரு. பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி - அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் செயலாளர், பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு
18. கலாநிதி ஹான்ஸ் விஜேசூரிய - சனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்
19. திரு. எச்.எஸ்.கே.ஜே. பண்டார - அரச தகவல் பணிப்பாளர் நாயகம்
20. திரு. ரோஹன ஹெட்டியாராச்சி
21. திருமதி மலர்மதி கங்காதரன்
22. சனாதிபதி சட்டத்தரணி உப்புல் குமாரப்பெரும
23. திருமதி சமந்தா த சில்வா
24. திருமதி மந்தனா இஸ்மாயில்
25. திரு. பராக்கிரம திசாநாயக்க

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

இலங்கையின் அனைத்துப் பகுதிகளையும் பாதித்த “டிட்வா” சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவின் விளைவாக மனித உயிர்களுக்கு இழப்பு மற்றும் காயம் ஏற்பட்டமை மட்டுமல்லாது தனியார் மற்றும் அரச சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட்டதன் விளைவாக, அனர்த்தத்துக்குப் பிந்தைய புனர்வாழ்வு மற்றும் மீட்டெடுப்பு முயற்சிகளுக்குப் பதில்வினையாற்றும் முகமாக உயர் மட்ட மற்றும் ஒருங்கிணைந்த தேசிய மீட்புப் பொறிமுறையை அணிதிரட்டுவது உடனடி மற்றும் அவசரத் தேவை என்பதாலும்;

மேலும், தெளிவாக வரையறுக்கப்பட்ட தலைமைத்துவம், சான்றுகள் அடிப்படையிலான முன்னுரிமை மற்றும் அனைத்து நிறுவனங்களிலும் ஓர் ஒருங்கிணைந்த விநியோகப் பொறிமுறை ஆகியவற்றுடன் “றீபில்டிங் ஸ்ரீலங்கா " முன்னெடுப்புக்கான ஒரு நிருவாக மற்றும் செயல்பாட்டுச் சட்டகத்தைத் தாபிப்பது அவசியமாக இருப்பதாலும்;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அநுர குமார திசாநாயக்கா ஆகிய நான், மூலோபாய தலைமைத்துவம், ஒருங்கிணைப்பு, அனைத்து அனர்த்தத்துக்கு பிந்தைய புனர்வாழ்வு, மீட்டெடுப்பு புனரமைப்பு விடயங்கள் ஆகியவற்றில் ஒரு ஒத்திசைவான அணுகுமுறை மற்றும் மேற்பார்வை ஆகியவற்றை வழங்குவதற்கு இதன் மூலம் “சனாதிபதி செயலணியை” தாபிக்கிறேன், மேலும் உங்கள் விவேகம், திறமை மற்றும் நேர்மையின் மீதான மிகுந்த நம்பிக்கையையும் தைரியத்தையும் நிலைநிறுத்துவதற்கு கீழே கூறப்பட்ட பதவிகளில் அச் செயலணிக்கு உங்களை நியமிக்கிறேன்:-

1. கௌரவ ஹரிணி அமரசூரிய – பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர்
2. கௌரவ எச்.எம். விஜித ஹேரத் – வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்
3. கௌரவ ஹரிச்சந்திர அபயரத்ன - பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்
4. கௌரவ லால் காந்த – கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்
5. கௌரவ உபாலி பன்னிலகே – கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

6. கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி - கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்
7. கௌரவ பிமல் ரத்நாயக்க - போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்
8. கௌரவ நளிந்த ஜயதிஸ்ஸ - சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர்
9. கௌரவ அனில் ஜெயந்த பெர்னாண்டோ – தொழில் அமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் பிரதி அமைச்சர்
10. கௌரவ பட்டபெந்திகே தம்மிக – சுற்றுலா அமைச்சர்
11. கௌரவ சுசில் ரணசிங்க – வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்
12. கௌரவ ஹனீஃப் யூசுப் - ஆளுநர், மேல் மாகாணம்
13. கௌரவ அருண ஜயசேகர - பாதுகாப்பு பிரதி அமைச்சர்
14. கலாநிதி என்.எஸ். குமநாயக்க - சனாதிபதியின் செயலாளர்
15. கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும – செயலாளர், நிதி, திட்டமிடல் அமைச்சு
16. திரு. எச்.எஸ்.எஸ். துய்யகொந்தா - செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
17. திரு. பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி - அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் செயலாளர், பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு
18. கலாநிதி ஹான்ஸ் விஜேசூரிய - சனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்
19. திரு. எச்.எஸ்.கே.ஜே. பண்டார - அரச தகவல் பணிப்பாளர் நாயகம்
20. திரு. ரோஹன ஹெட்டியாராச்சி
21. திருமதி மலர்மதி கங்காதரன்
22. சனாதிபதி சட்டத்தரணி உப்புல் குமாரப்பெரும
23. திருமதி சமந்தா த சில்வா
24. திருமதி மந்தனா இஸ்மாயில்
25. திரு. பராக்கிரம திசாநாயக்க

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு மற்றும் வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்ற, மேற்கூறிய சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாகிய உங்களுக்கு அதிகாரமளிக்கிறேன்.

கூறப்பட்ட கடமைகள்:

i. பின்வரும் முக்கிய மீள்கட்டுமான நடவடிக்கைகளில் முழுமையான வழிகாட்டுதலை வழங்குதல், மூலோபாய முடிவுகளை எடுத்தல், அமைச்சுக்களுக்கு இடையேயான பிரச்சினைகளைத் தீர்த்தல், முக்கிய நிதி, மீட்டெடுப்பு மற்றும் புனரமைப்பு தேர்வுகளை வழிநடத்துதல்:-

   அ. அடிப்படைத் தேவைகள், சுகாதாரம் மற்றும் துப்புரவு ஏற்பாடுகள் ஆகியவற்றை மீண்டும் நிலைநாட்டுதல்
   ஆ. அடிப்படை உள்கட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்புதல்
   இ. வாழ்வாதாரம் மற்றும் சொத்துக்களை மேம்படுத்துதல்
   ஈ. உள்ளூர் பொருளாதாரத்தை மீட்டெடுத்தல்
   உ. டிஜிட்டல் தரவு முறைமைகள் மற்றும் முடிவுகளுக்கான ஆதரவு பொறிமுறையை தாபித்தல்
   ஊ. தொடர்பாடல் மற்றும் பங்கீடுபாட்டாளர் ஈடுபாட்டை மேம்படுத்துதல்

ii. மையக் குழுவின் முடிவுகளை செயல்படுத்துதல், அந்தந்த பகுதிகளில் புனர்வாழ்வு, மீட்டெடுப்பு, புனரமைப்பு மற்றும் நிதி திரட்டும் முன்னெடுப்புக்களைச் செயல்படுத்துவதை மேற்பார்வையிடுதல் மற்றும் முன்னேற்றத்தைக் கண்காணித்தல் ஆகிய நோக்கங்களுக்காக துறைசார்ந்த அமைச்சர்/களின் தலைமையில் உப குழுக்களை நியமித்தல்.

ஆகவே, செயலணிக்கு தேவையான உப குழுக்களை அமைக்க அதிகாரம் அளிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டுள்ளது, இதில் பின்வருவனவும் அடங்கும், அத்துடன் அவை பொருத்தமானவை என்று கருதப்படுகின்றன:

1. **அனர்த்தத்துக்குப்- பிந்தைய தேவைகளின் மதிப்பீட்டிற்கான குழு**

இயற்கை அனர்த்தத்தினால் ஏற்பட்ட பௌதிகச் சேதங்கள், பொருளாதார இழப்புகள் மற்றும் சமூக தாக்கங்கள் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றிற்கும் மற்றும் அது தொடர்புடைய வேறு ஏதேனும் பணிகளுக்கும் இந்தக் குழு பொறுப்பாகும்.

2. **பொது உட்கட்டமைப்பு மறுசீரமைப்பு குழு**

இந்தக் குழு, ஒருங்கிணைத்து வளங்களை வழங்குதல், சரியான நேரத்தில் அமுல்படுத்தப்படுவதை உறுதி செய்தல், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தையும் அனர்த்த மீள்தன்மை தரநிலைகளையும் பின்பற்றுதல் ஆகியவற்றின் ஊடாக போக்குவரத்து, மின்சாரம், நீர், நீர்ப்பாசனம், சுகாதாரம், கல்வி மற்றும் தொலைத்தொடர்பு உட்பட பாதிக்கப்பட்ட பொது உட்கட்டமைப்பு முறைமைகளின் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு ஆகிய செயல்முறையை மேற்பார்வையிடுதல் மற்றும் பிற தொடர்புடைய விடயங்களும் இதில் அடங்கும்.

3. **பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கான வீட்டுவசதி மறுசீரமைப்பு குழு**

பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு, பாதுகாப்பான பகுதிகளிலும், சமூக சேவைகள் மற்றும் பொது வசதிகள் உள்ள பகுதிகளிலும், வளங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளைத் திரட்டுவதன் மூலம், வீட்டுவசதி மீட்டெடுப்புத் திட்டத்தின் அடிப்படையில், சேதமடைந்த வீடுகளை மீண்டும் கட்டியெழுப்ப அல்லது புதிய வீடுகளைக் கட்ட இந்தக் குழு ஆதரவை வழங்குதலும் பிற தொடர்புடைய விடயங்களும்.

4. **உள்ளூர் பொருளாதார மற்றும் வாழ்வாதார மறுமலர்ச்சிக் குழு**

அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட வாழ்வாதாரங்களையும் வணிகங்களையும் விரைவாக நிலைப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களையும் உதவிகளையும் வழங்குதல், முக்கிய விநியோகச் சங்கிலிகளை மீண்டும் கட்டியெழுப்புதலும் மீட்டெடுத்தலும், நிதிச் சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல், பொருளாதார வாய்ப்புகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் வணிகங்கள், தொழிற்றுறை மற்றும் சமூக உறுப்பினர்கள் பொருளாதார ரீதியாக மீள்தன்மை கொண்ட சமூகங்களை ஊக்குவிப்பதற்காக விரிவான பொருளாதார மீட்டெடுப்பு உத்திகளை உருவாக்கி செயல்படுத்துவதற்கு வழிகாட்டுதல் ஆகியவற்றிற்கு இந்தக் குழு ஆதரவை வழங்கும்.

5. **சமூக உட்கட்டமைப்பு மறுசீரமைப்புக் குழு**

கல்வி, சுகாதாரம், நீர், துப்புரவு ஏற்பாடுகள் மற்றும் நலன்புரி உதவிகளை அணுகுதல் உள்ளிட்ட அத்தியாவசிய சமூக சேவைகளை மீட்டெடுப்பதை இந்தக் குழு ஒருங்கிணைக்கும். நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கும், நிவாரண முகாம்களைப் பொருத்தமான சூழ்நிலையில் பராமரிப்பதற்கும் இந்தக் குழு கண்காணித்து வழிகாட்டுதல்களை வழங்கும்.

6. **நிதி மற்றும் நிதியளிப்புக் குழு**

25/2260/801/028 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட “ரீபில்டிங் ஸ்ரீலங்கா நிதிய நிர்வாகக் குழு" எனப் பெயரிடப்பட்ட குழு, ஒரு நியதிச்சட்ட நிதியமாக முறைப்படுத்தப்படும்.

அது வரை, நிதி திரட்டுதல், ஒதுக்கீடு செய்தல் ஆகியவற்றை முறையாகவும் சுமுகமாகவும் நிர்வகித்தல் மற்றும் நிதி அணிதிரட்டுதல், வரவுசெலவுத்திட்டத்தைத் தயாரித்தல், நன்கொடையாளர் ஒருங்கிணைத்தல் உட்பட நிதி ஆதாரங்களை மேற்பார்வையிடுதல் மற்றும் "ரீபில்டிங் ஸ்ரீலங்கா நிதியத்தை" தற்போதுள்ள நிதிக் கொள்கைச் சட்டகத்திற்குள் வெளிப்படையான முறையில் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கான அளவுகோல்களை வகுக்க இந்தக் குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்படும்.

**7. தரவு மற்றும் தகவல் முறைமைக் குழு**

அனர்த்தத்துக்குப் பிந்தைய புனர்வாழ்வு மற்றும் மீட்டெடுப்புத் தேவைகளைக் கண்டறிந்து முன்னுரிமை அளிப்பதற்கும், மீட்டெடுப்புத் திட்டமிடலுக்கான உத்திகளை வழிகாட்டுவதற்கும், அமுல்படுத்தலைக் கண்காணிப்பதற்கும், தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் பங்கீடுபாட்டாளர்களிடையே தரவுப் பகிர்வு மற்றும் ஒருங்கிணைப்பை ஊக்குவிப்பதற்கும் தேவையான தரவு மற்றும் தகவல் முறைமைகளைத் தீர்மானிப்பதற்கும் தாபிப்பதற்கும் இந்தக் குழு பொறுப்பாகும். இது ஆதார அடிப்படையில் முடிவெடுப்பதை ஆதரிப்பதையும், வள ஒதுக்கீட்டை மேம்படுத்துவதையும் மேம்பட்ட பகுப்பாய்வு கருவிகள், முன்கணிப்பு மாதிரிகள் மற்றும் புத்தாக்கத் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதையும் உள்ளடக்கும்.

**8. பொதுமக்கள் தொடர்பாடல் குழு**

இந்தக் குழு, பொதுமக்கள் தொடர்பாடல், விழிப்புணர்வு மற்றும் பங்கீடுபாட்டார்களின் ஈடுபாட்டை ஒருங்கிணைக்க, புனர்வாழ்வு மற்றும் மீட்டெடுப்புக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான திருத்தமான தகவல்களை உரிய நேரத்தில் பரப்புவதை உறுதி செய்வதற்கு ஒரு பயனுள்ள தகவல் தொடர்பாடல் உத்தியை அறிமுகப்படுத்துவதற்கு பொறுப்பாகும்.

மேலும் நான் மேற்கூறிய சனாதிபதி செயலணியின் தலைவராக பிரதம அமைச்சர் கௌரவ ஹரிணி அமரசூரிய அவர்களையும், மேற்கூறிய செயலணியின் செயலாளராக திரு. ஜீ.எம்.ஆர்.டி.அபொன்சு அவர்களையும் நியமிக்கிறேன்.

மேலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு மற்றும் வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாகிய உங்களுக்கு, அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான விசாரணைகளை மேற்கொள்ளவும், அறிவுறுத்தல்களை வழங்கவும், றீபில்டிங் ஸ்ரீலங்கா சனாதிபதி செயலணியால் அத்தகைய உதவியை எதிர்பார்க்கும் போது அலுவலர்களின் உதவியைப் பெறவும் இதன் மூலம் நான் அதிகாரம் அளிக்கிறேன்.

மேலும், “றீபில்டிங் ஸ்ரீலங்கா சனாதிபதி செயலணியின் " உறுப்பினர்களாகிய நீங்கள், மேற்கூறிய பணிப்புரைகளுடன் தொடர்புடைய கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவ்வப்போது எனக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு இத்தால் உங்களுக்கு அறிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆம் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலச்சினையின் கீழ் கொழும்பில் அளிக்கப்பட்டது.

கௌரவ சனாதிபதியவர்களின் ஆணைப்படி,

**கலாநிதி என். எஸ். குமாநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

EOG 12 - 0265